

முத்தமிழ் அறிஞர் கலைஞரின் 8 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு இராணிப்பேடடைமாவட்ட அலுவலகத்திலும் முத்துக்கடை பேருந்து நிலையத்தில் வைக்கப்பட்டுள்ள கலைஞர் படத்திற்கும் திருவுருவச் சிலைக்கும் மாவட்டக் கழகச் செயலாளர் முன்னாள் அமைச்சர் இராணிப்பேட்டைஆர்.காந்தி தலைமையில் வீரவணக்கம் செலுத்தப்பட்டது.இதில் மாநில சுற்றுச்சூழல் அணி துணை செயலாளர் ஆர்.விநோத்காந்தி மாவட்ட அவைத்தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி மாவட்ட துணை செயலாளர் குமுதா குமார் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ. எல்.ஈஸ்வரப்பன் உள்பட நகர அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.



திருவண்ணாமலை மாநகர தி.மு.க. சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 8ஆம் ஆண்டு நினைவு நாள் ஊர்வல முடிவில், அவரது திருவுருவச் சிலைக்கு, கழக மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் கோ. கண்ணன், இரா.ஶ்ரீதரன், ப.கார்த்திவேல்மாறன், பிரியா விஜியரங்கன், க.சௌந்தரராசன், ஏ.ஏ.ஆறுமுகம், காலேஜ் ரவி, ந.சீனுவாசன், பா.ஷெரீப், எஸ். கண்ணதாசன் உட்பட பலர் உள்ளனர்.

## ஒருங்கிணைந்த நீர் மேலாண்மை -

# காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ள நடவடிக்கை தேவை!

## மக்களவையில் - டி.எம்.கதிர் ஆனந்த் கோரிக்கை!



புதுடெல்லி, ஆக. 8 –

ஆறுகள், நிலத்தடி நீர்த்தேக்கங்கள் சதுப்புநிலங்கள் உள்ளிட்ட அனைத்து நீர்வளங்களையும் ஒன்றோடொன்று தொடர்புடைய சுற்றுச்சூழல் அமைப்புகளாகக் கருதி ஒருங்கிணைந்த முறையில் நிர்வகிக்கும் அவசியம், நீர்வளப் பகிர்வில் நிலவும் சட்ட, நிர்வாக மற்றும் மாநிலங்களுக்கு இடையேயான சவால்கள், அறிவியல் அடிப்படையிலான நீர்வள திட்டமிடல், தரவுப் பகிர்வு, நிகழ்நேர கண்காணிப்பு, மக்கள் பங்கேற்பு மற்றும் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் நீண்டகால நீர் மேலாண்மை உத்திகள் குறித்து ஒன்றிய அரசின் நிலைப்பாட்டை விளக்குமாறு வேலூர் தொகுதி உறுப்பினர் டி. எம்.கதிர் ஆனந்த் கேட்டிருந்தார்.

இதற்கு ஒன்றிய ஜல் சக்தி அமைச்சகத்தின் இணை அமைச்சர் ராஜ் பூஷண் சௌத்ரி பதிலளிக்கையில், ஒன்றிய அரசு ஒருங்கிணைந்த நீர்வள மேலாண்மைக்கு முக்கியத்துவம் அளித்து வருவதாக தெரிவித்தார். தேசிய நீர்க் கொள்கை – 2012 (National Water Policy 2012) ஆற்றுப்படுகை அடிப்படையிலான திட்டமிடல் மற்றும் Integrated Water Resources Management (IWRM) கொள்கைகளை வலியுறுத்துவதாகவும், நீர்வளங்களை நிலையான, சமமான மற்றும் திறமையான முறையில் பயன்படுத்துவதே அரசின் நோக்கமாக இருப்பதாகவும் கூறினார்.

மேலும், இந்திய அரசியலமைப்பின் ஏழாவது அட்டவணை, மாநிலப் பட்டியல் (Entry 17) படி நீர் என்பது மாநில அரசுகளின் பொறுப்பாக இருந்தாலும், பல்வேறு நிறுவனங்களின் அதிகாரப் பிரிவு, மாநிலங்களின் நீர்ச் சட்டங்களில் உள்ள வேறுபாடுகள், மாநிலங்களுக்கு இடையேயான நதிநீர் தகராறுகள், நீர் சேமிப்பு மற்றும் விநியோக உள்கட்டமைப்பு பற்றாக்குறை, நகரமயமாக்கல் மற்றும் தொழில்மயமாக்கல் காரணமாக அதிகரித்து வரும் நீர் தேவை போன்ற சவால்களை ஒன்றிய அரசு பல்வேறு திட்டங்கள், நிதி உதவிகள் மற்றும் நிறுவன அமைப்புகள் மூலம் எதிர்கொண்டு வருவதாக தெரிவித்தார்.

அறிவியல் அடிப்படையிலான நீர்வள மேலாண்மைக்காக National Water Informatics Centre (NWIC) உருவாக்கப்பட்டு, IndiaWRIS மற்றும் Water Information Management System (WIMS) மூலம் ஒருங்கிணைந்த தரவுப் பகிர்வு மற்றும் நிகழ்நேர தகவல் சேகரிப்பு மேற்கொள்ளப்படுவதாகவும், நாடு முழுவதும் சுமார் 39,000 RealTime Data Acquisition System (RTDAS) நிலையங்கள் செயல்பட்டு வருவதாகவும் அரசு தெரிவித்துள்ளது.

மக்கள் பங்கேற்பை உறுதி செய்யும் வகையில், இந்திய தொழில்நுட்பக் கழகங்கள் (IIT), தேசிய தொழில்நுட்பக் கழகங்கள் (NIT), இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சில் (ICAR), அரசுசாரா அமைப்புகள் (NGO), குடிமக்கள் அமைப்புகள், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் Water User Associations (WUA) ஆகியவற்றுடன் இணைந்து செயல்பட அரசு பல்வேறு திட்டங்களை முன்னெடுத்து வருவதாகவும், ஜல் ஜீவன் மிஷன், அடல் புஜல் யோஜனா, ஜல் சக்தி அபியான் – Catch the Rain உள்ளிட்ட திட்டங்கள் மூலம் மழைநீர் சேகரிப்பு, நீர் பாதுகாப்பு மற்றும் நீர் பயன்பாட்டு திறன் மேம்படுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், பாதுகாப்பான குடிநீர் அனைவருக்கும் கிடைப்பதை உறுதி செய்வது, மழைநீர் சேகரிப்பை விரிவுபடுத்துவது, பாரம்பரிய நீர்நிலைகளை மீட்டெடுப்பது, நீர் மறுசுழற்சி, நுண்ணீர்ப்பாசனம், நிலத்தடி நீர் மேலாண்மை மற்றும் அறிவியல் தொழில்நுட்பங்களைப் பயன் படுத்தி காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் திறன் கொண்ட, உள்ளடக்கிய மற்றும் நிலையான நீர் நிர்வாகத்தை உருவாக்குவதே மத்திய அரசின் நீண்டகால நோக்கமாகும் என அமைச்சர் தனது பதிலில் கூறியுள்ளார்.

## உணவு தானிய சேமிப்பு உள்கட்டமைப்பை மேம்படுத்த

# தமிழ்நாடு அரசிடமிருந்து ஒன்றிய அரசுக்கு முன்மொழிவுகள் வந்துள்ளதா?

## மக்களவையில் - தே.மலையரசன் கேள்வி!



புதுடெல்லி, ஆக. 8 –

கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன் மக்கள வையில் எழுப்பிய கேள்வி வருமாறு:–

கடந்த 5 ஆண்டுகளில், உணவு தானிய சேமிப்பு உள்கட்டமைப்பை உரு வாக்குதல், நவீனமயமாக்குதல் மற்றும் மேம்படுத்து வதற்காக ஒன்றிய அரசின் உதவியைக் கோரி, தமிழ்நாடு மாநில அரசிடமிருந்து அரசுக்கு முன்மொழிவுகள் வந்துள்ளதா?

அப்படியென்றால், அத்தகைய முன்மொழிவுகளின் விவரங்கள் என்ன? ஒப்புதல் அளிக்கப்பட்ட, விடுவிக்கப்பட்ட உதவியின் எண்ணிக்கை மற்றும் ஆண்டு மற்றும் திட்டம் வாரியாக நிலுவையில் உள்ள மீதித் தொகை ஆகிய விவரங்கள் என்ன?

ஒவ்வொரு முன்மொழி வின் தற்போதைய நிலை மற்றும் ஒன்றியஅரசின் உதவியை அனுமதிப்பதில் ஏதேனும் தாமதம் ஏற்பட்டால் அதற்கான காரணங்கள் என்ன?

தமிழ்நாட்டில் தற்போதுள்ள உணவு தானிய சேமிப்புத் திறன், அதன் கொள்முதல் மற்றும் இடையிருப்பு இருப்பு ஆட்சேர்ப்புகள் உட்பட, ஏதேனும் மதிப்பீட்டை ஒன்றிய அரசு மேற்கொண்டுள்ளதா?


தமிழ்நாட்டில் நவீன களஞ்சியங்கள் மற்றும் குளிர்பதன வசதிகள் உள்ளிட்ட அறிவியல் பூர்வமான சேமிப்பு உள்கட்டமைப்பை வலுப்படுத்து வதற்காக, ஒன்றிய அரசின் உதவியை விரைவாக ஒப்புதல் அளித்து விடுவிக்க அரசு எடுத்துவரும் நடவடிக்கைகள் என்ன? என தே.மலையரசன் மக்களவையில் கேள்வி எழுப்பினார்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 8 ஆம் ஆண்டு நினைவுநாளையொட்டி திருப்பத்தூர் மாவட்ட தி.மு.க. சார்பில் வாணியம்பாடியில் உள்ள மாவட்டக் கழக அலுவகத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த திருவுருவப் படத்திற்கு திருப்பத்தூர் மாவட்ட செயலாளர் க.தேவராஜி மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில் மாவட்ட துணை செயலாளர் ஆ.சம்பத்குமார், மு.அமைச்சர் நிலோப்பர் கபில், தலைமைச் செயற்குழு உறுப்பினர் மு.அசோகன், ஆலங்காயம் மத்திய ஒன்றிய பொறுப்பாளர் வி.ஜி.அன்பு, மாதனூர் கிழக்கு ஒன்றிய பொறுப்பாளர் க.இராமமூர்த்தி மற்றும் கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உடன் இருந்தார்கள்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் எட்டாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு காரைக்கால் தி.மு.க. தலைமை அலுவலகமான கலைஞரகத்தில் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாநில கழக அமைப்பாளரும் புதுச்சேரி சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான எ.எம். எச்.நாஜிம் மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தினார். உடன் தி.மு.க. தலைமை கழக நிர்வாகிகளும் கழக உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.



திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி பேருந்து நிலையத்தில் முத்தமிழ்அறிஞர் கலைஞர் அவர்களின் 8வது நினைவு நாளை முன்னிட்டு அவரது படத்திற்கு நகர கழக செயலாளர், நகர மன்ற உறுப்பினர் சாரதி குமார் தலைமையில், நகர மன்ற தலைவர் உமா சிவாஜி கணேசன், மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன்நகர மன்ற துணைத் தலைவர் கே.கயாஸ் அகமது, பொதுக்குழு உறுப்பினர் விமலன், நகர கழக நிர்வாகிகள் தென்னரசு, குபேந்திரன், பத்மாவதி, ம.பா. சாரதி, ரவி, கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 8ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு, கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம், உளுந்தூர்பேட்டை ஒன்றிய, நகர தி.மு.க. சார்பில் பேருந்து நிலையம் அருகில் அமைக்கப்பட்ட கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு வடக்கு மாவட்டச் செயலாளர், சங்கராபுரம் தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன் தலைமையில், ஒன்றிய கழக செயலாளர்கள் வைத்தியநாதன், முருகன், நகர கழக செயலாளர் டேனியல் ராஜ், நகர மன்ற தலைவர் திருநாவுக்கரசு, வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் அருண்ராஜ் ஆகியோர் முன்னிலையில் கழக நிர்வாகிகள் பலர் பெருந்திரளாக கலந்து கொண்டு மலர் தூவி மரியாதை செய்தனர், இதனைத் தொடர்ந்து ஏழை எளிய பொதுமக்கள் 2000 பேருக்கு அன்னதானம் வழங்கினார்கள், இதில் கலா சுந்தரமூர்த்தி, குரு மனோ, முருகவேல், செல்வகுமாரி ரமேஷ் பாபு, குரு ராஜ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



வேலூர் மாவட்டம் கொணவட்டத்தில் மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார் ஏற்பாட்டில் முத்தமிழ்அறிஞர் கலைஞர் அவர்களின் 8வது நினைவு நாளை முன்னிட்டு அவரது படத்துக்கு மாநகர செயலாளர் ப. கார்த்திகேயன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் வட்ட செயலாளர் ஆனந்தகுமார், பகுதி செயலாளர் முருகபெருமாள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தி.மு.க. தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 8 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு வேலூர் தெற்கு மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் அலங்கரிக்கப்பட்ட திருவுருவப் படத்திற்கு தெற்கு மாவட்ட செயலாளர் ஏ.பி.நந்தகுமார் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமது சகி, மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர்.பி.ஏழுமலை, மாநகராட்சி மேயர் சுஜாதாஆணந்த குமார் மற்றும் மாவட்ட, மாநகரநிர்வாகி கள், ஒன்றிய,பகுதி செயலாளர்கள்,நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், தலைமை கழக நிர்வாகிகள், மாநில,மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள்,வட்ட கழக நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், கழக இந்நாள், முன்னாள் நிர்வாகிகள் உள்ளனர்.



கடலூர் மேற்கு மாவட்டம் விருத்தாசலத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 8 ஆம் ஆண்டு நினைவு நாள் முன்னிட்டு அவரது திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது. இந்நிகழ்வில் விருத்தாசலம் நகர கழக செயலாளர் தண்டபாணி மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் சி.வெ.க. வெங்கடேசன் மாவட்ட ஆதிதிராவிட நலக்குழு அமைப்பாளர் எஸ்.இராமு தாழநல்லூர் கொளஞ்சியப்பன் குருசரஸ்வதி வழக்கறிஞர்கள் எம்.கே. அருள்குமார் க.ரவிச்சந்திரன் பட்டி சு.வசந்த் இராதாகிருஷ்ணன் கு.பழனிச்சாமி மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.